# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

***************

### இலங்கை அரசாங்கத்தின் வலுசக்தி அமைச்சரது இந்திய விஜயம்

இந்திய தொழில்துறை கூட்டமைப்பினால் (CII), புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் (MNRE) மற்றும் வெளியுறவு அமைச்சகத்தின் புதிய, வளர்ந்து வரும் மற்றும் மூலோபாய தொழில்நுட்பங்கள் (NEST) பிரிவு ஆகியவற்றுடன் இணைந்து புது டில்லியில் ஏற்பாடு செய்த 6வது சர்வதேச எரிசக்தி மாநாடு மற்றும் கண்காட்சியில் (IECE 2025) கலந்து கொள்வதற்காக இலங்கை அரசாங்கத்தின் வலுசக்தி அமைச்சர் கௌரவ (எந்திரி) குமார ஜெயக்கொடி அவர்கள் 2025 செப்டம்பர் மாதம் 23 முதல் 24 ஆம் திகதி வரையில் இந்தியாவுக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். "இந்தியாவின் வலுசக்தி மாற்றத்தை முன்கொண்டுசெல்லல்: நிகர பூஜ்ஜியத்திற்கான வழித்தடம்" என்ற கருப்பொருளுடன் இம்மாநாடு நடைபெற்றிருந்தது.

2. இம்மாநாட்டில் கலந்து கொண்டிருந்த கௌரவ அமைச்சர் அவர்கள் “24 மணி நேர மின்விநியோகத்துக்காக சூரியக்கல மற்றும் காற்றாலை மின் மூலங்களை மேம்படுத்தல்” என்ற தலைப்பில் நடைபெற்ற அமைச்சர்கள் மட்ட விசேட கலந்துரையாடல் அமர்வில் உரை நிகழ்த்தினார். அத்துடன் நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் இந்தியாவின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி துறையின் சிறந்த செயற்பாடுகள் காட்சிப்படுத்தப்பட்ட IECE கண்காட்சியிலும் அவர் கலந்துகொண்டிருந்தார். அதேபோல, இம்மாநாட்டின் பக்க நிகழ்வாக ஒழுங்கமைக்கப்பட்ட, மின்சாரம் மற்றும் எரிசக்தி துறையில் முக்கிய இந்திய நிறுவனங்களின் CXO-க்களுடனான வட்டமேசை மாநாட்டிலும் கௌரவ அமைச்சர் அவர்கள் பங்கேற்றார். மேலும், தேசிய அனல் மின் கழகத்தின் (NTPC) தலைமை முகாமைத்துவ பணிப்பாளரையும் அமைச்சர் சந்தித்தார்.

3. இந்த விஜயத்தின் போது, மின்சாரம், வீடமைப்பு மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சர் ஸ்ரீ மனோகர் லால் கட்டார் மற்றும் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை அமைச்சர் ஸ்ரீ பிரகலாத் ஜோஷி ஆகியோருடன் இருதரப்பு சந்திப்புகளும் நடைபெற்றன. இச்சந்திப்புகளில் மின்சார வலையமைப்பு இணைப்பு மற்றும் இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு எரிசக்தியினை ஏற்றுமதி செய்வதற்கான சாத்தியக்கூறுகள் மற்றும் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்துதல் உள்ளிட்ட இருதரப்பு திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

4. அத்துடன் இந்த விஜயத்தின் அங்கமாக, ISO சான்றளிக்கப்பட்ட அதிநவீன, 1.2 ஜிகாவாட் சூரிய மின்சக்தி உற்பத்தி ஆலையினையும் கௌரவ வலுசக்தி அமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.

************

**கொழும்பு**
**01 ஒக்டோபர் 2025**